


முதலமைச்சர் அவர்கள் 30.12.2024 அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை மூலம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதி திட்டத்தின் கீழ், அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1000/ ஊக்கத்தொகை வழங்கும் வகையில் புதுமைப்பெண் திட்டத்தினை விரிவாக்கம் செய்து தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், இத்திட்டத்தினை இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் , சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்து, 5555 மாணவிகளுக்கு ஊக்கத்தொகையுடன், வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகம், நிதிக்கல்வி புத்தகம் அடங்கிய புதுமைப்பெண் பெட்டகப்பை மற்றும் வங்கி பற்று அட்டை(Debit Card)களை வழங்கினார்.

# 2 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பை அரவை செய்ய திட்டம்!

## பெரம்பலூர் சர்க்கரை ஆலை அரவை பணியை தொடங்கி வைத்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

*பெரம்பலூர், ஜன. 1 -*

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், எறையூர் சர்க்கரை ஆலையின் அரவை பணியை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் தொடங்கி வைத்து, சர்க்கரை ஆலையினை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு , பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் குன்னம் சி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சர்க்கரை ஆலை அரவை பணியை தொடங்கி வைத்து, போக்குவரத்துத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-



பொதுத்துறை நிறுவனமான பெரம்பலூர் சர்க்கரை ஆலை தமிழ்நாடு அரசின் சர்க்கரை கழக கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1978 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 2010 ஆம் ஆண்டு எறையூர் சர்க்கரை ஆலையில் 18 மெகாவாட் இணைமின் உற்பத்தி திட்டம் துவங்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு முதல் இணைமின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 2024-25ஆம் ஆண்டிற்கான அரவை பருவம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கரும்பு அரவை 8.3.2025 வரை நடைபெற உள்ளது. 2 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கரும்பினை அரவை செய்திடவும் ஆலை சராசரி சர்க்கரை கட்டுமானம் 9.75% அளவிற்கு எய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. தினசரி முழு அளவை திறனுடன் அரவை செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் ஊக்கத் தொகையாக 2020-21 ஆம் ஆண்டிற்கு ரூ.192.50ம், 2021 22 ஆம் ஆண்டிற்கு ரூ.195ம், 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.195ம் 2023-24 ஆம் ஆண்டிற்கு ரூ.215ம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரவைப் பருவத்தில் அரவை செய்த கரும்பிற்காக ரூ.71 கோடி கிரயத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2023-24 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 2.39 லட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவைக்காக 3,380 பயனாளிகளுக்கு ரூ.5.13 கோடி கரும்பு அரவைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் கரும்பு அரவையில் கூடுதல் இலக்கு எட்டப்பட்டு விவசாயிகளுக்கு அரவைத் தொகை வழங்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் கரும்பு பயிர் பரப்பு விரிவாக்கம் செய்திட சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்து அவர்களுக்கான நலத்திட்டங்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதனை விவசாய பெருமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதில் எறையூர் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி ரமேஷ், மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் க.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் முத்தமிழ்ச் செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் தழுதாழை.பாஸ்கர், மகாதேவி ஜெயபால்,

வேப்பந்தட்டை வட்டாட்சியர் மாயகிருஷ்ணன், எறையூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயந்தி ராம்குமார் மற்றும் விவசாயிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அஞ்சி நடுங்கிய நிலை மாறி, துணிச்சலாக புகார் தரும் பெண்களுக்கு -

# எதிர்க்கட்சிகளின் போராட்டம் மன அழுத்தத்தை ஏற்படுத்தும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

**சென்னை, ஜன. 1 -**

**பாலியல் புகார்களில் காவல் துறையிடம் புகார் அளிக்கவே அஞ்சி நடுங்கிய நிலை மாறி, தற்போது துணிச்சலாக புகார் தருவதை பாராட்ட மனம் இல்லாமல், சில கட்சிகள் போராட்டம் நடத்துவது பெண்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.**


தினகரன்
டிசம்பர் 31, 2024 செவ்வாய்க்கிழமை
மகளிருக்கான ஆட்சி

இது குறித்து 31.12.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் பெண்களுடைய முன்னேற்றத்துக்கு பல்வேறு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். இவரது ஆட்சியில் தான் பெண்களுக்கான இலவச பேருந்து பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் முக்கியமானது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது பெண்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தி உள்ளது. புதியதாக ஆயிரக்கணக்கான மகளிர் சுய உதவிக்கு முக்கள் தொடங்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் தொழில் தொடங்க அரசால் கடனும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 202324ம் ஆண்டில் 30 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏழரை லட்சம் மகளிர் குழுக்கள் உள்ளன.

பெண்களும் அர்ச்சகராக ஆகலாம் என தமிழக அரசு அறிவித்து பெண் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பை 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தி அறிவித்துள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அளிக்கப்படும் வீடுகளும் இனி குடும்ப தலைவிகள் பெயரிலேயே பதிவு செய்யப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். சாலை பாதுகாப்பு பணிகளில் பெண் காவலர்களை நியமிக்க வேண்டாம் என்பதை நடைமுறைப்படுத்தினார். பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு மகளிர் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. வேலைக்கு செல்லும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு அரசு மகளிர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

முக்கிய போட்டி தேர்வுகளுக்கான பயிற்சிகளை பெண்களுக்கு வழங்குவது, பெண் குழந்தைகள் பாதுகாப்புக்காக தற்காப்புக்கலை பயிற்சி வழங்குவது என பல திட்டங்களை தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தை கள் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையிலும் அவர் ர்களின் உயர் கல்விக்கு உதவி செய்யும் நோக்கிலும் புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் அரசு பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு உயர்கல்வி பயில மாதம் 1000 உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதனால் குடும்பச்சூழல், வறுமை, காரணமாக கல்வியை தொடர முடியாத மாணவிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

அரசு உதவி பெறும் பள்ளி மாணவிகளும் பயன்பெறும் வகையில் புதுமை பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை தூத்துக்குடியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று துவக்கி வைத்தார். உயர்கல்வியிலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டு மாணவிகள் முதன்மையான இடத்தில் இருக்கிறார்கள். கல்வியை பொறுத்த வரையில் பெண்கள் தான் முன்னிலையில் உள்ளனர். 50 ஆண்டுகளுக்கு முன் பெண்கள் படிப்பதில் தடைக்கற்கள் இருந்தன.

பெண்களை படிக்க வைத்தால் பண்பாட்டை இழந்துவிடுவார்கள் என்ற மூடநம்பிக்கை இருந்தது. பெண்களுக்கு எதிராக படிப்புக்கு மட்டுமல்ல, வேறு எந்த தடை வந்தாலும் அதை உடைப்பேன் என முதல்வர் கூறியுள்ளார். பல்வேறு திட்டங்கள், பாதுகாப்பு ஆகியவற்றால் பெண்களுக்கு துணிச்சல் அதிகரித்துள்ளது. பாலியல் புகார்களில், பெண்கள் காவல்துறையினரிடம் புகார் அளிக்கவே அஞ்சி நடுங்கிய நிலை மாறி, தற்போது துணிச்சலாக புகார் தருகிறார்கள் என்பதை பாராட்ட மனம் இல்லாமல் சில கட்சிகள் போராட்டம் நடத்துவது பெண்களுக்கு மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.


இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., வழிகாட்டின்படி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான் ஏற்பாட்டில்மாநில கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு போடியில் மாநில அளவில் ஹாக்கி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், போடி நகரச் செயலாளர் புருஷோத்தமன் ஆகியோர் பரிசுகள் வழங்கினார்கள். உடன் பெரியகுளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.எம்.பாண்டியன், செயற்குழு உறுப்பினர் சங்கர், பொதுக்குழு உறுப்பினர் ராஜாரமேஷ், தேனி நகர மன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் செல்வம் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# நின்றசிலையும்! வென்றகலையும்!





ஈரடிக் குறட்பாக்களில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும் அடக்கி, அவற்றை 133 அத்தியாயங்களாக வகுத்து திருக்குறள் என்னும் அரும் பெரும் நூலாக ஆக்கியளித்து, உலக அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெறச் செய்தவர் அய்யன் திருவள்ளுவப் பேராசானாவார். வாழ்வியலின் அனைத்துக் கூறுகளையும், இனம், மொழி, பாலினப் பாகுபாடின்றி காலங்கடந்தும் அனைவருக்கும் பொருந்துமாறு உரைத்திருப்பதால் திருக்குறளை ‘உலகப் பொது மறை’ என சான்றோர் விளிப்பது சாலப் பொருத்தமே!

உலகமே வியக்கும் கலைத்திறம் கொண்ட தமிழர்கள், கல்லிலும், மண்ணிலும், மரத்திலும், சுதையிலும், சுவரிலும், பொன்னிலும் செய்த அருங்கலைகள் எல்லாம் படிப்படியாக வளர்ந்து உன்னத நிலையைத் தொட்டு வெற்றி பெற்றதோடு, பிற நாட்டுச் சிற்பிகளின் கலைத்திறத்தையும் அந்நாளிலேயே அறிந்து அவற்றிற்கும் ஊக்கமளித்தனர். மகதம், அவந்தி, மராட்டியம் ஆகிய பல நாட்டுக் கலைஞர்களின் கைத்திறம் தமிழகத்திலும் மிளிர்ந்ததே இதற்குச் சான்று பகர்கிறது.

சிற்பங்களில் சிந்தையைப் பறிகொடுத்து மகிழும் செந்தமிழ்ப் பெருமிதம் முத்தமிழ் அறிஞர் கலைஞரிடம் எப்போதும் ஒளிர்ந்தது. பார் போற்றும் சிற்பக் கலைஞரான கணபதி ஸ்தபதி, கலைஞரின் வெவ்வேறு தமிழ் உணர்வு சார்ந்த அடையாளங்களுக்கு நெருக்கமானவர்.

பூம்புகார் மன்றங்கள் மாடங்கள் மண்டபங்கள் வாயிலாகக் கண்ணகி கோட்டம், சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் கடல் அலைகளுக்கு இடையே நிற்கிற ஒற்றை விரலைப் போல நிமிர்ந்து இருக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு வடிவம் அமைக்கப்பட்டது.

திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் 133 அடி உயரத்தில் குமரிமுனையில் சிலை அமைப்பதாக முடிவெடுக்கப்பட்டு, அறத்துப்பாலில் உள்ள 38 அதிகாரங்கள் மனத்தில் கொண்டு 38 அடி உயரத்தில் சிலையின் பீடம் அமைக்கப்பட்டு, அது அறப் பீடம் என்று அழைக்கப்பட்டது, மீதி 95 அடி சிலையின் உயரம். சிலையின் முகம் மட்டும் 20 அடியாகும்.

ஒரு மாடிக் கட்டட உயரமும் 150 டன் எடையும் கொண்டது இச்சிலையின் தலைப்பகுதியாகும்.

சிலையின் கட்டுமானத்திற்கு மொத்தம் 3,681 துண்டுக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. அவைகளின் மொத்த எடை 7 ஆயிரம் டன் ஆகும். ஒவ்வொன்றும் 3 முதல் 8 டன் எடை கொண்ட கற்களைக் கடல் வழியாகப் படகின் மூலம் சிலை அமையவிருக்கும் பாறைக்கு எடுத்துச் சென்று, இரவு பகல் பாராது 500 சிற்பிகளைக் கொண்டு இடைவிடாது 372 நாள்களில் ஒன்பது கோடி செலவில் கணபதிஸ்தபதி அவர்கள் இந்த கற்காப்பிய சிற்பத்தைக் கட்டி முடித்தார்.

**சிலையை வடிவமைக்கும் பணி நடைபெறும்போது, “சிலை நிற்குமோ நிற்காதோ” என்று சந்தேகமாகக் கேட்பவரிடம் எல்லாம் கணபதிஸ்தபதி அவர்கள், “அலையும் மலையும் இருக்கும் வரை சிலை அசையாது இருக்கும், கவலைப்படாதீர்கள்” என்று கூறுவதுண்டு.**

**தஞ்சையில் பெருவுடையார் கோயிலின் 216 அடி உயரம் கொண்ட விமானக் கட்டுமானப் பணியின் போது, அதனைப் பார்வையிட்ட பலர், ‘விமானம் விழுந்து விடுமோ?’ என்று அச்சப்பட்டதாகக் கூறுவதுண்டு. அப்போது அதை நிர்மாணித்த குஞ்சரமல்லன் மாமன்னன் இராஜராஜப் பெருந்தச்சன் பெருமையாக, “விமானத்தின் நிழல் கூட விழாது” என்று கூறினாராம்.**

**அத்தகைய பெருமை வாய்ந்த குஞ்சரமல்லன் இராஜராஜப் பெருந்தச்சன் பரம்பரையில் வந்த திரு.கணபதி ஸ்தபதியும் அவ்வாறு கூறியதில் வியப்பேதும் இல்லையே!**

தமிழகத்தையே உலுக்கிய ‘சுனாமி’ என்று அழைக்கப்படும் ஆழிப்பேரலையின் போதும் எவ்விதப் பாதிப்புமின்றி, கம்பீரமாக நிற்கிறார் திருவள்ளுவர்.

**“பூம்புகார் எழில் மாடத்தை என் கருத்திற்கேற்ப அமைத்துத் தந்தவரும், பாஞ்சாலங்குறிச்சியில் இடிந்த கோட்டையை எழுப்பித் தருவதற்கு உடனிருந்து உதவியவரும், வள்ளுவர் கோட்டம் வையகம் புகழ்ந்திட, உருவாகிட, சிற்பி ஆச்சார் அவர்களுடன் இணைந்து, கையில் உளி எடுத்தவரும், அண்ணா அறிவாலயம் முகப்பினையும் அழகுற அமைத்துத் தந்தவரும், சிற்பச் சித்தருமான கணபதி ஸ்தபதியார் அவர்கள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, நமது அய்யன் வள்ளுவனுக்குக் காலத்தால் அழியாத நினைவுச் சின்னத்தை என் இதயம் இறக்கைகள் பெற்றுப் பறந்து மகிழ்கிற அளவுக்கு, என் இரத்த நாளங்களில் இன்ப அருவி பாய்ந்து பரவுகின்ற அளவுக்கு, என் சுவாசக் கோசம் ஆனந்தப் பெருமூச்சால் நிரம்பிப் பிதுங்குகின்ற அளவுக்கு, வடித்தெடுத்து நிலைநாட்டி விட்டார். வங்கமும், இந்துவும், அரபியும் என முக்கூடல் சங்கமிக்கும் குமரி முனைப் பாறை முற்றத்தில் அவருக்கும், அவருடன் சேர்ந்து, அற்புதச் சிலையைப் பொறுப்புடன் உருவாக்கியுள்ள சிற்பிகள் ,அலுவலர்கள், பணியாளர்கள், பொறியாளர்கள் அனைவருக்கும் தமிழகத்தின் பாராட்டுக்கள் .**

**“இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து<br>அதனை அவன்கண் விடல்”**

**என்னும் திருக்குறளை நினைவூட்டி, அதன்படி என் ஆய்வுக்கேற்ப முடித்தமைக்காக ஆயிரம், பதினாயிரம், லட்சோபலட்சம் நன்றி மலர்களைத் தூவுகின்றேன்” என்று வைர வரிகளால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதினார்கள்.**


133 அடி உயரங் கொண்ட திருவள்ளுவர் சிலை போல கருத்தாழமுள்ள - முற்றிலும் கல்லால் ஆன கட்டுமான நுட்பங்கள் செறிந்த சிலையாக - எங்கணும் எவரும் கண்டதில்லை, கேட்டதுமில்லை, நினைத்துப் பார்த்ததுமில்லை. வெற்றி கண்ட இப்பணி, சிற்பக் கலை மரபுக்கு மேலுமொரு அணியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. செவ்வனே முடிவுற்ற திருவள்ளுவர் சிலைப் பணி 01.01.2000 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் நாட்டுக்கும் தமிழினத்துக்கும் வழங்கப்பட்டது .

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு, 25 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைத் தொடர்ந்து 30.12.2024 முதல் 1.1.2025 வரை மூன்று நாள்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் வெள்ளி விழா நிகழ்ச்சியை வெகு சிறப்பாக நடத்துகிறார்கள்.

மாபெரும் வரலாற்றுப் பொன்னேடு மலர்ந்த புனித நன்னாள் 25 ஆண்டுகளுக்குப்பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று மீண்டும் எழுச்சிக் கோலம் கொண்டு வெள்ளி விழா என்னும் முத்திரையோடு கன்னியாகுமரி மட்டும் அல்ல: தமிழ்நாடு முழுவதுமே விழாவின் வீச்சினைப் பரப்பி நிற்கிறது.

பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டிகள். கல்லூரி மாணவர்களிடையே சோஷியல் மீடியாவில் ஷார்ட்ஸ் - ரீல்ஸ் - ஏ.ஐ மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பங்கள் வாயிலாக திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச்சிலை அருகே சீரொளிக் காட்சி (3D Laser) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருக்கின்ற தமிழ் இணையக் கழக மையங்கள், தமிழ்ச் சங்கங்கள், பிற மாநிலங்களில் இருக்கும் தமிழ்ச் சங்கங்கள், புது தில்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் யூடியூப் மூலம் இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றது. வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு தமிழ் இணையக் கழக மையங்கள் மூலமாகத் திருக்குறளின் பெருமைகள் குறித்த போட்டிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட நூலகங்களி லும், இன்றைய விழா நாளில் திருவள்ளுவர் புகைப்படம் வைக்கப்பட்டு திருக் குறளின் பெருமைகளை உணர்த்துகின்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுத் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்படுகிறது. திருக்குறள் விளக்க உரைகள் மற்றும் திருக்குறள் தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. டிசம்பர் 25 முதல் 30 வரை மாவட்ட அளவில் திருக்குறள் தொடர்பான கருத்தரங்கம், பேச்சரங்கம் முதலியவை நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**ஔவை அருள்**
இயக்குனர்
தமிழ் வளர்ச்சித்துறை



37 கோடி ரூபாய் செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழை பாலம் கட்டப்பட்டு அதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருக்குறள் நெறிபரப்பும் 25 தகைமையாளர்களுக்குப் பரிசுகள் வழங்குவதும் கலைமாமணி சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் தலைமையில் “திருக்குறளால் அதிக நன்மை தனிமனிதருக்கே சமுதாயத்திற்கே” எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றமும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் தோரணவாயிலுக்கு அடிக்கல் நாட்டி; திருவுருவச் சிலை வெள்ளி விழாச் சிறப்பு மலர் வெளியிடுவதோடு திருக்குறள் சார்ந்த போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கினார்.

சமகாலத்தில் வள்ளுவர், திருக்குறளும் சங்க இலக்கியமும், வள்ளுவம் போற்றும் சமய நல்லிணக்கம், திருக்குறள் போற்றும் மகளிர் மாண்பு, வள்ளுவம் காட்டும் அறம், திருக்குறளில் இசை நுணுக்கம் என்கிற தலைப்புகளில் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

திருக்குறள் தொடர்பான மிகப்பெரிய நூல் கண்காட்சி, உலகெங்கும் உள்ள திருவள்ளுவர் சிலைகள் தொடர்பான துலங்கல் குறியுடன் வரைபடக் காட்சி, நூற்றாண்டுகள் பல கடந்த திருக்குறள் தொடர்பான ஓலைச்சுவடிகள் தனி அரங்கினில் காட்சிப்படுத்தப்படுவது வெள்ளி விழாவிற்கு மாட்சியாக திகழ்கிறது.

அமெரிக்காவின் சுதந்திரதேவி சிலையைக் கண்டு வியந்த காலம் போய், கன்னியாகுமரியில் வெள்ளி விழாக் காணும் 133 அடி உயர செந்நாப்போதரின் சிலையைக் கண்டு அனைவரும் இறும்பூதடையும் தருணமிது.

தமிழகத்துக்கு நிலையான நெடும் புகழ் காட்டும் வரலாறு நின்ற சிலையாகவும் வென்ற கலையாகவும் என்றும் விளங்கி வருவது தமிழினத்தின் நற்பேறாகும்.